
ஆண்டு சந்தா ரூ. 60/-

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 5 இதழ் : 5 மார்ச் 2009



## Dr. D.G.S. தினகரன் அவர்களை
## அன்போடு நினைவு கூருகிறோம்



அன்பின் அப்போஸ்தலன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட நம் அன்பு ஆவிக்குரிய தகப்பனும், தீர்க்கதரிசியுமான **Dr. D.G.S. தினகரன் ஐயா** அவர்கள் கோடி கணக்கான மக்களின் துயரத்தையும், கண்ணீரையும் இயேசு கிறிஸ்துவின் அன்பினாலும், மனதுருக்கத்தினாலும் பிரார்த்தனைகளை ஏறெடுத்து ஆசீர்வாதமாக மாற்றி களிப்படைய செய்தவர்கள். தேவனால் இந்த நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட ஒரு ஒப்பற்ற பாத்திரம். அநேக தேவனுடைய ஊழியர்களுக்கு எலியாவைப்போல தகப்பனாகவும், இரதமுமாகவும் விளங்கியவர்கள். கடந்த வருடம் பிப்ரவரி 20ம் தேதி தேவன் அவர்களை தம்முடைய மகிமைக்குள் பிரவேசிக்க செய்து தம்மோடு அழைத்துக்கொண்டார்.

20.02.2009 அன்று முதல் வருட நினைவாக சிறப்பு ஜெபக்கூடுகை தூத்துக்குடியில் நம் ஷாலோம் அலுவலகத்திலும், குஜராத்தில் தாகோத் பணித்தள அலுவலகத்திலும் ஏறெடுக்கப்பட்டது. குறிப்பாக இயேசு அழைக்கிறார் பிப்ரவரி மாத இதழில் அழகாக கொடுக்கப்பட்டுள்ள அவர்களுடைய வாழ்க்கை மற்றும் ஊழியங்களைக் குறித்த தொகுப்பை வாசித்து **Dr.D.G.S. தினகரன் ஐயா** ஐயா அவர்களுக்காக தேவனைத் துதித்தோம். மேலும் அவர்கள் விட்டுச்சென்ற இயேசு அழைக்கிறார் ஊழியங்கள், காருண்யா பல்கலைக்கழகம், பெதஸ்தா ஊழியங்கள், சீஷா ஊழியங்கள் மற்றும் அனைத்து ஊழியங்களையும் **Dr. பால் தினகரன்** அவர்கள் தலைமையில் வல்லமையாக நடத்தி செல்வதற்காக தேவனைத் துதிக்கிறோம்.

தொடர்ந்து நாங்களும் Dr. பால் தினகரன் , சகோதரி. இவாஞ்சலின், சாம், ஷேரன், ஸ்வீட்டி குறிப்பாக அம்மா ஸ்டெல்லா தினகரன் அவர்களையும் தம்முடைய ஆவியினால் நிறைத்து இரட்டிப்பாக பயன்படுத்தவும் அவர்கள் எல்லோருக்கும் நல்ல சுகத்தையும், தீர்க்க ஆயுசையும் தந்து வழிநடத்தவும், மேலும் ஊழியத்தினுடைய சகல பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட்டு ஆயிரமடங்காய் ஆசீர்வதிக்க பிரார்த்தனை செய்கிறோம்.

"பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்". (ஆதி 12 : 3)



## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவகிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், தியாகமான காணிக்கைகளினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பிப்ரவரி மாதம் முழுவதும் தேவன் போதுமானவராக இருந்து வழி நடத்தினார். மார்ச் மாதத்தில் பரீட்சை எழுதும் அனைத்து தேவ பிள்ளைகளுக்காகவும் விசேஷமாக ஜெபிக்கிறோம். பீல் ஆதிவாசி விசுவாசி பிள்ளைகள் நூறுக்கும் அதிகமானவர்கள் 10–ம் வகுப்பு, 12–ம் வகுப்பு மற்றும் கல்லூரி படிப்பு படிக்கும் யாவரும் நல்ல மதிப்பெண்கள் எடுத்து சமுதாயத்தில் நல்ல நிலைமைக்கு வர நீங்கள் குறிப்பாக ஜெபியுங்கள். பிப்ரவரி மாதத்தில் சுதேச ஊழியர்கள் 80 பேர்கள் B.Th Exam 6th Semester எழுத தேவன் கிருபை தந்துள்ளார். இதற்காக தேவனைத் துதியுங்கள்.

மார்ச் மாதம் முழுவதும் ஜெப மாதமாக அனுசரிக்கவும், குறிப்பாக 40 நாட்கள் உபவாசித்து பீல் மக்கள், விசுவாசிகள் சபையாக கூடி ஜெபிக்கவும் உள்ளார்கள். பீல் மக்கள் மத்தியில் ஜெப ஆவி ஊற்றப்பட ஜெபியுங்கள்.

வருகின்ற மே மாதத்தில் 20,000க்கும் அதிகமான ஆதிவாசி பிள்ளைகளை தேவனண்டை வழிநடத்த, கிராம ஆலயங்களில் **CBC** (Children Bible Class) 10 நாட்கள் நடத்துவதற்கு Materials ஆயத்தமாகி வருகிறது. இதன் தேவை ரூ. 1.5 இலட்சம் கிடைக்கப்பெற ஜெபியுங்கள். மார்ச் மாதத்தில் 40 புதிய சுதேச ஊழியர்களுக்கான 3 நாள் தேர்வு முகாம் நடைபெற உள்ளது. மேலும் 20 கிராமங்களில் ஆலயக் கட்டுமானப் பணி ஆரம்பித்து நடைபெற உள்ளது. தடைகள் நீங்கி விரைவில் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

ஊழியத்தின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட ஜெபியுங்கள். குறிப்பாக ரூ.500 மாதந்தோறும் கொடுத்து ஜெபித்து தாங்கும் ஷாலோம் கிராம ஆதரவாளர்கள் எழும்ப கருத்தாக ஜெபியுங்கள். எப்படியாவது மாதம் ஒருவருக்காவது ஷாலோம் ஊழியத்தை அறிமுகம் செய்துவைக்க அன்புடன் வேண்டுகிறேன்.

தூத்துக்குடி தலைமை அலுவலகத்திலும், குஜராத், தாகோத் பணித்தள அலுவலகத்திலும் பணிபுரியும் தேவ பிள்ளைகளுக்காக ஜெபிக்கவும். மேலும் பீல் மக்கள் இரட்சிப்பின் பணியில் ஈடுபட்டுள்ள முன்னேற்ற பணியாளர்கள், பிரதிநிதிகள், தாங்கும் அனைத்து ஆதரவாளர்கள் அனைவரையும் தேவன் அபரிவிதமாக ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவுடைய படிப்பிற்காக ஜெபியுங்கள். உங்கள் யாவருக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறோம். “தேவகிருபை நம்மனைவருடன் தங்கியிருப்பதாக”!

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

குஜராத் மேம்தாபாத்தில் 05.11.2008ல் நடைபெற்ற ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாமில் **சகோ. மோகன்.சி.லாசரஸ்** அவர்கள் அளித்த செய்தியின் சுருக்கம்...



நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பது பற்றி சில காரியங்களை குறித்து பார்ப்போம். வேதத்திலே பரிசுத்த ஆவியிலே ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நாம் பரிசுத்த ஆவிக்குள் ஜெபிக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். **"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாம—ருக்கிறபடியால் ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.**

**ரோமர்: 8: 26,27** வசனத்தின்படி ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். பரிசுத்த ஆவிக்குள் ஜெபிக்கிறதை குறித்து பவுல் தன்னுடைய அனுபவத்தை எழுதியிருக்கிறார். **"என்னத்தினாலெனில் நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால் என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி என் கருத்து பயனற்றதாயிருக்கும்" . ( I கொரி. 14:14)** யின் படி அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணும் போது நாம் எதற்காக ஜெபிக்கிறோம் என்பது மற்றவர்களுக்கு புரியாது. ஆகவே நம்முடைய ஜெபம் கருத்தற்றதாயிருக்கும். ஆகவே நாம் கூடி ஜெபிக்கும்போது தெரிந்த மொழியில் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் எதற்காக ஜெபிக்கிறோம் என்று மற்றவர்கள் புரிந்து கொண்டு நம்மோடு இணைந்து ஜெபிப்பார்கள். அந்நிய பாஷையில் பேசுகிறவர்கள் தேவனோடு பேசுகிறார்கள். சிலர் அதை ஒரு அடையாளம் என்று நினைக்கிறார்கள். அதற்குள் அநேக ஆசீர்வாதம் இருக்கிறதை அவர்கள் அறியவில்லை. **"நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால் சபைக்கு பக்தி விருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்". (I கொ: 14:12)** தேவனோடு நெருங்கி வாழ கொடுத்த மொழி தான் அந்நியபாஷை. அந்நிய பாஷையில் நாம் பேசும் போது பக்திவிருத்தியடைகிறோம். தேவனுடைய அன்பை அதிகமாக உணருகிறோம். **"ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார**

**லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு." (எபே: 6:12)** இந்த வசனத்தின்படி போராட்டத்தில் இருந்து வெற்றி பெறுவதற்காக நாம் அந்நிய பாஷையில் நிரம்பி ஜெபிக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது மாம்சத்தோடும், இரத்தத்தோடும் நமக்கு போராட்டம் அல்ல அதாவது மனிதர்களோடல்ல, அவர்களுக்கு பின்னால் இருந்து அவர்களை செயல்படுத்துகிற பிசாசோடு என்று சொல்லுகிறது. வேதம் சொல்லுகிறது, நமது போராட்டம் துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் வானமண்டலத்திலுள்ள பொல்லாத இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதியோடும் போராட்டம் இருக்கிறது. சாத்தானை ஜெயிப்பதற்கு தான் நாம் பரிசுத்த ஆவிக்குள் ஜெபிக்க வேண்டும். அவ்வாறு ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அவனுடைய தந்திரங்களை நமக்கு வெளிப்படுத்துவார். இரண்டு விதமாக நாம் ஜெபிக்க வேண்டும். 1. போராட்ட ஜெபம். 2. மன்றாட்டு ஜெபம்.

**போராட்ட ஜெபம்.**

**"அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படி கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்". (மத்தேயு. 12:29)** என்று இயேசு கூறுகிறார். இயேசு சாத்தானை ஒரு பலவான் என்று கூறிப்பிடுகிறார். பலவானை முத—ல் கட்ட வேண்டும். அவனை கட்டிவிட்டால் அவனிடம் இருக்கும் எல்லா பொருட்களையும் (ஆத்துமாக்களை) நாம் கொள்ளையடித்துவிடலாம். சாத்தானிடம் வல்லமை இருக்கிறது. அதை வைத்து அவன் மந்திரம், பில்—சூனியம், போன்ற தந்திரங்களை செய்து மக்களை ஏமாற்றி வருகிறான். கொலை, கொள்ளை, விபச்சாரம், விக்கிரக ஆராதனை போன்ற பாவ பழக்கத்திற்கு மக்களை அடிமையாக்கி வைத்திருக்கிறான். அநேக ஆத்துமாக்களை நரகத்திற்கு நேராக கொண்டு போகிறான். அவனை விட வல்லமையானவர் நம்மோடு இருக்கிறார். அவனை கா—ன் கீழ் மிதித்தவர். **"பூலோகத்தில் நீங்கள் எவைகளை கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழக்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் ". (மத்தேயு18:18)** என்றார் இயேசு. அதின் அர்த்தம் என்னவென்றால் இயேசுவின் நாமத்தினாலே இந்த சாத்தானை கட்டுகிறேன் என்றால் பரலோகம் அதை

அங்கிகரிக்கிறது. சாத்தானின் செயல் முறியடிக்கப்படும். இரண்டு காரியங்களைக் கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார் : 1. ஜெபத்தின் மூலம் சாத்தானை கட்டவும், 2. பாவப் பிடியி–ருக்கும் மக்களை கட்டவிழ்க்கவும்

**1. சாத்தானை கட்ட வேண்டும்.**

நாம் பலவானை இயேசுவின் நாமத்தில் கட்டி ஜெபிக்கும்போது பலவான் கட்டப்பட்டு அவனிடம் இருக்கும் ஆத்துமாக்கள் மீட்கப்பட்டு மனந்திரும்புகிறார்கள். நாம் முழங்கா–ல் நின்று ஜெபித்தால் சாத்தானின் வல்லமை கட்டப்படும். இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலம் அநேக கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்கிறோம், அவ்வாறு செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே நம் ஊழியர் குழு அங்கு சென்று அங்கு சுற்றி திரியும் பலவானை கட்டி ஜெபித்துவிட்டு வருவார்கள். ஒரு கிராமத்திற்கு சென்ற போது அந்த கிராமத்தின் மத்தியில் ஒரு பெரிய மரம் இருந்தது. அதை சுற்றி அந்த கிராம மக்கள் வணங்கிக் கொண்டிருந்தார்கள். நம் குழுவினர் சென்று விசாரித்தபோது அது அவர்களின் 3 தலைமுறையினர் வணங்கிவரும் குலதெய்வம் என்று கூறினார்கள். நம் குழுவினரும் அந்த மரத்தை சுற்றினார்கள், பலவானை கட்டி ஜெபித்தார்கள். அடுத்த வாரம் ஊழியத்திற்கு சென்ற போது அந்த மரம் வெட்டப்பட்டு கிடந்ததைக் கண்டோம். விசாரித்தபோது ஒரே இரவில் அந்த மரம் பட்டுப்போனதாக கூறினார்கள். நம்முடைய குழுவினர் அங்கு சென்று இயேசுவின் நாமத்தைச் சொல்– ஜெபித்தார்கள். தேவன் அற்புதம் செய்தார். நாம் ஆவிக்குரிய போராட்டத்தில் இருக்கும்போது நாம் முழங்கா–ல் நின்று, உபவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் பலவான் கட்டப்படுவான். ஆத்துமாக்கள் மீட்கப்படுவார்கள்.

**2. மக்கள் கட்டவிழ்க்கப்பட வேண்டும்.**

பாவ பழக்கத்தில் இருக்கிறவர்கள் இயேசுவின் இரத்தத்தின் வல்லமையினாலே கட்டவிழ்க்கப்படும் போது மனந்திரும்புவார்கள். சாத்தான் வைத்திருக்கும் அனைத்து கட்டுகளையும் ஆவியானவர் அறிவார். நாம் ஆவியில் நிறைந்து ஜெபிக்கும்போது ஆவியானவர் அதை வெளிப்படுத்துவார். நாம் ஆவியில் நிறைந்து அந்நிய பாஷையில் ஜெபிக்கும்போது சாத்தானின் பிடியில் இருக்கிறவர்கள் கட்டவிழ்க்கப்பட்டு, இயேசுவை பற்றி கூறும்போது எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணங்களிலும், வானமண்டலத்தின் ஆவி கிரியை செய்கிறது. அந்த ஆவியை நாம் இயேசுவின் நாமத்தில் துரத்த வேண்டும். அப்பொழுது

அநேக ஆத்துமாக்களை நாம் மீட்டு கொள்ள முடியும். நீங்கள் பிசாசை எதிர்த்து ஜெபிக்கும்போது முத—ல் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவேண்டும். பிசாசை கண்டு பயப்படாதிருங்கள். நீங்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தால் சாத்தான் உங்களை ஜெயிக்கவே முடியாது. அவனை காட்டிலும் நம்மோடு இருக்கிற இயேசு பெரியவர். அதை நாம் விசுவாசிக்க வேண்டும். சாத்தானுக்கு பெரிய சேனை இருக்கலாம். நம் தேவனிடம் கோடான கோடி தூதர்கள் இருக்கிறார்கள். அவர்களை அனுப்பி பிசாசை எதிர்க்கும் பலனை நமக்கு தருவார். விசுவாசம் எனும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். என் நாமத்தினாலே பிசாசை துரத்துவீர்கள் என்று இயேசு கூறியுள்ளார். இயேசுவின் நாமத்தினாலே **"பிசாசே, உன்னை நான் எதிர்க்கிறேன்"** என்று சொல்லுங்கள். **"இயேசுவின் இரத்தத்தை தெளிக்கிறேன்"** என்று சொல்லுங்கள் சாத்தான் உங்களை விட்டு ஓடிப்போவான்.

## 3. வேத வசனமாகிய ஆவியின் பட்டயம்.

வேதத்தை அதிகமாக தியானித்து நமது மனதில் பதியவைத்து கொள்ள வேண்டும். அவற்றை சொல்— ஜெபிக்கவேண்டும். **"இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன் ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது". (லூக்கா 10:19)** வசனத்தின்படி ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது. பிசாசு போராடி பார்க்கலாம். ஆனால் உங்களை சேதப்படுத்தவோ, மேற்கொள்ளவோ முடியாது. வேத வசனம் கூறுகிறபடி சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்க நமக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். சர்ப்பம், தேள் விஷத் தன்மையுள்ளவை. ஆண்டவர் பிசாசை தான் அவ்வாறு கூறுகிறார். அவற்றை நமது கா—ன் கீழாக போட்டு மிதிக்க வேண்டும். ஏனென்றால் இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்த போது சாத்தானின் தலையை மிதித்துவிட்டார். அவர் வெற்றி பெற்றார். சாத்தான் தோற்றுப்போனான். "சாத்தானே, உன்னை என் காலுக்கு கீழாக இயேசு ஆக்கிவிட்டார். என் மேல் உனக்கு அதிகாரம் இல்லை. நீ என்னை ஜெயிக்க முடியாது. இயேசுவின் நாமத்திலே உன் கிரியையை மிதிக்கிறேன்" என்று சொல்— ஜெபிக்க வேண்டும். அவ்வாறு சொல்— ஜெபிக்கும் போது தேவன் சகல விதமான போராட்டங்களில் இருந்து நமக்கு வெற்றியைத் தருகிறார்.

# பரிசுத்தவான்களின் உபவாசங்கள்!

**"பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு..." (வெளி 5:8)**



**தேசங்களின் எழுப்புத-ல் பங்கு வகித்த ஒவ்வொரு பரிசுத்தவான்களுக்கும் பின்னாக இருந்து ஓர் முக்கிய ஆயுதம் உபவாசமாகும்.**

***ஃபிரான்சிஸ் அஸிஸி :*** 12–ம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் மிகவும் செல்வச் செழிப்பில் பிறந்தவர். மனம்போன போக்கில் உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருந்தார். இவருடைய இரட்சிப்பிற்காக இவரது தாயார் தேவ சமூகத்தில் உபவாசமிருந்து கண்ணீரோடு ஜெபித்ததின் விளைவாக தேவன் இவரை சந்தித்தார். இவர் இரட்சிக்கப்பட்டவுடனே தன் மேன்மைகளையெல்லாம் வெறுத்து இயேசுவுக்காக வாழ ஆரம்பித்தார். இவரது ஊழியத்தில் ஆயிரங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். பல நாட்கள் உபவாசமிருந்து பிரசங்கித்தார். கால்களில் செருப்பு அணியாது இயேசுவுக்காக நடந்து சென்று இவர் செய்த ஊழியம் ஒரு சவாலாகும். இவர் ஜெபத்தோடும், உபவாசத்தோடும் தெருக்களில் நடந்து சென்றபோது இவரைப் பார்த்த அநேகர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டனர்.

***ஜான் வெஸ்-- :*** இவர் உபவாசத்தைத் தவறாமல் நிறைவேற்றுகிறவராய் இருந்தார். ஊழியர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசியும் வாரத்தில் இருமுறை உபவாசிக்க வேண்டுமென்று கூறுவார். இவரது நாட்களில் பிரசங்க பீடங்களில் அக்கினிப்பொறி பறக்கும். ஒரு மாபெரும் எழுப்புதலுக்கு வித்திட்ட இவர் மற்றவர்களுக்கு உபவாசத்தின் தேவையை வ–யுறுத்தத் தவறியதேயில்லை. மற்ற ஜெபிக்காத கிறிஸ்தவர்களைப் போலவே உபவாசிக்காத கிறிஸ்தவர்களும் பரலோக பாதையில் செல்லாதவர்கள் என்று கூறுவார்.

***ஜான் கால்வின் :*** இவர் ஜெனிவாவைச் சேர்ந்தவர். ஒழுங்காய் உபவாசிக்கிற உத்தம ஊழியராக இருந்தார். இவரது உபவாச ஜெபத்தின் மூலம் முழுபட்டணமும் இரட்சிப்படைந்தது. மட்டுமல்ல, அநேக ஜெபக்குழுக்கள் எழும்பினது. திரள்திரளான ஜெபவீரர்கள் எழும்பினர். இவரது ஊழியத்தால் அநேகர் தொடப்பட்டு வீடுகளில் குழுக்களாக ஜெபிக்க ஆரம்பித்தனர். உபவாசத்தின் வல்லமையைக் கண்டனர். பாரம்பரியக் கிறிஸ்தவர்கள் முழு இருதயத்தோடும் உபவாசிக்கத் தொடங்கினர். எழுப்புதல் தீ அனலாய்ப் பற்றி எரிந்தது.

***சார்லஸ் ஃபின்னி :*** இவர் அதிகாலையில் அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிட்டார். இவரது சீரான உபவாச ஜெபம் இவரை பரிசுத்த ஆவியின் பெலத்திற்குள் வைத்திருந்தது. உபவாசத்தில் தேவனோடு சஞ்சரிப்பதற்காக தனிமையில் மிகுதியான நேரத்தை செலவு செய்தார். உபவாசம் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆதாரமாயிருந்தது என்று அடிக்கடி கூறுவார். இவர் தன்னில் வல்லமை குறைந்ததை உணரும்போது 3–நாட்கள் கடுமையான உபவாசம் செய்வது இவரது வழக்கமாகும். இவரைச் சுற்றிலும் எப்பொழுதும் பரிசுத்தாவியானவரின்

பிரசன்னம் சூழ்ந்திருக்கும். இதன் மூலம் வியாபாரிகள், தொழிலாளர்கள், அதிகாரிகள் மற்றும் ஆயிரக்கணக்கானோர் பாவ உணர்வடைந்து, இரட்சிப்பிற்காக கதறி அழுது தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தனர்.

***ஜான் நாக்ஸ் :*** இந்த உபவாச வீரனின் ஜெபமானது இங்கிலாந்து ராணியின் எல்லா யுத்த படைவீரர்களின் பெலத்தைப் பார்க்கிலும் வல்லமையுள்ளதாக இருந்தது. இங்கிலாந்து தேசத்தை அரசாண்ட கொடிய ராணியான மேரி, இவரை ஒழித்துக் கட்ட முயற்சித்தாள். அவளது முழு படைகளும் இவருக்கு முன்னாள் நிற்க முடியவில்லை. இவர் உபவாசித்து ஜெபிக்க ஆரம்பித்தபோது, ராணி அந்த ஜெபத்தை எதிர்க்க முடியாதவளாய் நடுங்கினாள். தொடர்ந்து அவர் ஜெபித்ததால், அவள் நாடுகடத்தப்பட்டு மரித்துப் போனாள்.

***ஜோனத்தான் எட்வர்ட்ஸ் :*** இவர் உபவாச ஜெபத்தில் அதிக நம்பிக்கையுள்ளவராக இருந்தார். பிரசங்கபீடத்தில் நிற்க பெலனில்லாமற்போகும் வரைக்கும் உபவாசிக்கிறவராய் இருந்தார். ஆதலால், தேவன் இவரது ஊழியத்தை அளவில்லாமல் ஆசீர்வதித்தார். இவர் மிகுந்த உபவாசத்தோடு பிரசங்கிக்கும்போதே ஜனங்கள் கலங்கி நடுங்குவார். நரகத்திற்குள் சென்று விடுவோமோ என்று எண்ணிப் பயப்படுவர். தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து இவர் பிரசங்கித்தால் அநேகருடைய இருதயம் பாவ உணர்வடையும்.

***மார்ட்டின் லூத்தர் :*** புரட்சிகரமான உபவாச வீரராகத் திகழ்ந்தவர். உபவாசத்தின் வ—மையால் ஆட்சியிலுள்ளவர்களுக்கும், அதிகாரத்திலுள்ளவர்களுக்கும் சவால் விட்டவர். தன் உயிருக்கு அஞ்சாமல் தவறான கொள்கைகளை எதிர்த்து, பலவித சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தவர். புரோட்டஸ்டாண்ட் இயக்கத்தின் ஸ்தாபகராக இருந்தவர். பரிசுத்த வேதாகமத்தை இவர் மொழிபெயர்க்க ஆரம்பித்தபோது அரசாங்கமும், உலகமும், சபையும் இவரை எதிர்த்தபோதிலும், முழு வேதாகமத்தையும் மொழிபெயர்த்தார். இவரது நீண்ட நாள் உபவாசத்தால், சரீரம் பாதிக்கப்படும் என்று அநேகர் சொல்—யும் உபவாசத்தை விடவில்லை. இவர் உபவாசிக்கும் நாட்களில் நரம்புகள் சுருங்கி உடல் முறுக்கெடுத்தாலும் அவர் உபவாசத்தைக் கைவிடாதிருந்தார்.

***டேவிட் பிரெய்னாட் :*** இளம் வயதில் தேவனுடைய ஊழியத்திற்கென்றும் உபவாச ஜெபத்திற்கும் தன்னை அர்ப்பணித்தவர். ஜெப வேளையில் இவரது டைரியில் எழுதிய குறிப்புகள் எழுப்புதலைக் கொண்டு வருபவை. இவர் மிகச்சிறந்த உபவாச வீரன் என்று அந்த வார்த்தைகளே சாட்சி பகரும். இவரது வாழ்வில், பல நாட்களை ஜெபத்திற்காகவும், உபவாசத்திற்காகவும் ஒதுக்கினார். தேவன் ஊழியத்திற்கு தன்னைப் பக்குவப்படுத்தவும், தமது கிருபையால் நிரப்பவும் உபவாசமிருந்தார். என் ஆத்துமா தேவன்மேல் தாகமாக இருப்பதால் உணவைப் புசிக்க மறந்தேன். இதைப் பார்க்கிலும் தேவசமூகம் எனக்கு மிகவும் இனிமையாயிருக்கிறது என்று எழுதினார்.

***வில்—யம் ப்ராம்வெல் :*** 19ம் நூற்றாண்டின் வல்லமையான ஊழியராகத் திகழ்ந்தார். இவர்

உபவாசித்து ஜெபித்ததினால் விசேஷ தேவ வல்லமையால் நிரப்பப்பட்டார். இவரது உபவாச ஜெபம் நாட்டில் மிகப்பெரிய எழுப்புதலைக் கொண்டு வந்தது. காலை 9–மணி முதல் மாலை 3–மணி வரை முழங்கா–ல் உபவாசத்தோடு ஜெப அறையில் தனிமையாய்த் தொடர்ந்து ஜெபிப்பது இவரது வழக்கம். உபவாசமும், தற்பரிசோதனையும் குறைந்ததினால் அநேக விசுவாசிகள் இரட்சிப்பில் நிலைநிற்க கூடாதவர்களாக உள்ளனர் என்று கூறுவார்.

***__ரீஸ் ஸவ்வல்ஸ் :__*** இரண்டாம் உலகப்போரின் வெற்றி இவரது உபவாச ஜெபத்தின் வல்லமையில் இருந்தது. இவரைப் போல மன்றாட்டு உபவாச வீரர் இதுவரை எழும்பினதில்லை. எனலாம். இவர் ஊழியம் செய்யத் தொடங்கினது முதல், இரண்டு தினங்களுக்கு ஒருமுறை மட்டுமே புசித்து, அதையே வாழ்க்கை முறையாக்கிக் கொண்டார் இவர் 15–நாட்களுக்கு தொடர்ந்து உபவாசிக்கும்படி பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டார். 2–வது உலகப்போரில் ஆங்கிலேயர் அடைந்த வெற்றிக்குக் காரணம் இவரது புத்தகத்தை வாசிப்பவர்கள் அறிவர்.

***__இ.ஏ. ஸ்பர்ஜன் :__*** இவர் தம் இளவயதில் தேவ ஊழியரானார். பிரசங்க சாதுரியத்தினால் உலகத்தைக் கலக்கின இவர் ஒரு நல்ல உபவாச வீரர். மனந்திரும்பக்கூடாதபடி ஜனங்களின் இருதயங்களைக் கடினப்படுத்தி, கட்டிவைத்திருக்கிற பிசாசுகள் துரத்தப்படவும், ஜனங்கள் இரட்சிக்கப்படவும் சாதாரண பிரசங்கமும், பாரம்பரிய ஜெபமும் பலனளிப்பதில்லை என்று நம்பினார். ஊக்கமான ஜெபமும், வ–மையான உபவாசமுமே மிகுந்த பலனைக் கொண்டு வரும் என்பதில் உறுதியாயிருந்தார். ஜெபவாழ்க்கை பாதுகாக்கப்படவும், ஆவிக்குரிய வளர்ச்சியடையவும், தேவனுக்காக பெரிய காரியங்களை சாதிக்கவும் உபவாசம் தேவை என்று வ–யுறுத்தினார்.

***__சவனரோலா :__*** 14–ம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தா–யின் எழுப்புதல் வீரர். இவர் மூலம் ஃபிளாரன்ஸ் நகரில் எழுப்புதல் தீ பற்றி பிடித்தது. இதன் விளைவாகப் பட்டணமெங்கும் தேவனைத் துதிக்கும் துதியும், பாடல்களும் வெகுவாகப் பரவின. இவரது ஊழியத்தின் மூலம் முழுபட்டணமும் இரட்சிக்கப்பட்டது. இவரது நீண்டகால உபவாச ஜெபங்களால், பிரசங்க மேடை ஏறக்கூட பெலனில்லாதவராக இருப்பினும், இவரது பிரசங்கத்தைக் கேட்டு கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் கதறி அழுது கிறிஸ்துவுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தனராம். ஆகவே, இவரது உபவாசத்தின் வ–மை மிகப் பெரிய ஆத்தும அறுவடையாக வெளிப்பட்டது.

***__ப்ளாரென்ஸ் :__*** 14–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதும், இருளின் ஆளுகையின் கீழ் இருந்தது. அந்த சூழ்நிலையில்தான் தொடர்ந்து உபவாசித்து ஜெபிக்கக்கூடிய ஃப்ளாரென்ஸ் என்கிற வல்லமையான ஊழியரைத் தேவன் அங்கு அனுப்பினார். அந்த தேசத்தின் இருளை நீக்கும்படி தேவன் இவரைக் கொண்டு தமது திட்டத்தைச் செயல் படுத்தினார். இதனால் இவரது சரீர பெலன் குன்றினாலும், ஆவிக்குரிய பெலன் அதிகரித்தது. இதினிமித்தம் அவர் கத்தோ–க்க சபையின் தலைவர் போப் ஆண்டவரை நடுங்க வைத்தார். தேசத்தின் எழுப்புத–ன் தேவன் இவருக்கு ஒரு முக்கிய பங்கைத் தந்தார்.

– நன்றி முழங்கால் யுத்தம்.

## ஷாலோம் பணிதளத்தில் 40 நாட்கள் உபவாச ஜெபம்

பீல் ஆதிவாசி விசுவாசிகள், மூப்பர்கள், ஊழியர்கள் பொதுவாகவே ஜெபிப்பவர்கள். இயேசுவை அதிகம் நேசிப்பவர்கள், ஆத்துமாக்களின் நிறைவான அபிஷேகத்தைப் பெற்றவர்கள். ஆத்தும பாரம் உள்ளவர்கள். தேவனுக்காக தியாகத்துடன் காணிக்கை கொடுப்பவர்கள்.

ஆவியானவரின் வழிநடத்துத–ன்படி 2010ம் ஆண்டு டிசம்பர் மாத்திற்குள் பெரிய எழுப்புதலைக் காண்பதற்காக பீல் ஆதிவாசி விசுவாசிகள், மூப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஜெபிப்பதற்கும், செயல்படுவதற்கும் ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாய்க் கற்றுக் கொடுத்து, பயிற்சியளித்து செயல்பட இருக்கிறோம். அதன்படி முதலாவதாக மார்ச் 3ம் தேதி முதல் ஏப்ரல் 11ம் தேதி வரை (சரியாக 40 நாட்கள்) அனைத்து (சுமார் 500) ஷாலோம் சபைகளிலும் விசுவாசிகள், மூப்பர்கள், ஊழியர்கள் உபவாசித்து ஜெபிக்க முன் வந்துள்ளார்கள். அவர்களுக்கு தினமும் எப்படி உபவாசிக்க வேண்டும்? எப்படி கருத்தாக நேரங்களை ஒதுக்கி ஜெபிக்க, ஆராதிக்க, வேதத்தை தியானிக்க வேண்டும்? என்ன என்ன காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்? இவைகள் அனைத்தையும் விவரித்து ஒரு நாள் உபவாச கூடுகையில் எடுத்துரைத்து அதற்கான குறிப்புகளையும், செய்திகளையும் மற்றும் திட்டங்களையும் எழுதி அவர்கள் கையில் கொடுத்துள்ளோம். சபைகளில் 40 நாட்கள் கூடுகை ஜெபம், அதன் பின்பு விசுவாசிகள் ஒரு சில குடும்பமாக தொடர் சங்க– ஜெபம் என்று திட்டமிட்டுள்ளார்கள். மேலும் இந்த நாட்களில் 6 வெள்ளிக்கிழமைகளில் விசேஷித்த உபவாசக் கூடுகை வைத்து அதிக நேரம் ஜெபத்தில் செயல்பட உள்ளார்கள். இந்த உபவாச ஜெப நாட்களில் தங்கள் பரிசுத்தத்திற்காக, குடும்ப ஆசீர்வாதங்களுக்காக, சொந்த பீல் மக்கள் இரட்சிப்புக்காக, தங்கள் சபை எழுப்புதலுக்காக, தங்கள் சபை ஊழியர்களுக்காக, தேசத்தின் எழுப்புதலுக்காக, பாராளுமன்ற தேர்தலுக்காக, தங்கள் சமுதாயத்திலுள்ள சபை மற்றும் குடும்பத்திலுள்ள சாபங்கள் நீங்கி செழிப்பு உண்டாக இப்படியாக பல ஜெபக்குறிப்புகளை கருத்தாக வைத்து ஜெபிக்க இருக்கிறார்கள். தேவன் தாமே இவர்கள் மத்தியில் ஜெப ஆவி ஊற்ற நீங்கள் அனைவரும் ஜெபிக்க வேண்டுகிறோம். 40 நாட்கள் உபவாச ஜெப நாட்களாக ஆரம்பிக்கும் மார்ச் 3ம் தேதி செவ்வாய் கிழமை அன்று முதல் உபவாச ஜெபங்கள் 24 மணி ஷாலோம் உபவாச நாளாக ஆசரிக்க உள்ளோம். அன்று சபை எழுப்புதலுக்காக, 7,000 கிராமங்களிலும் 7,000 சபைகளும், 7,000 ஊழியர்களும் எழும்ப குறிப்பாக 2010க்குள் 1,000 சபைகள் 1,000 ஊழியர்கள் எழும்பவும் ஷாலோம் ஊழியங்களுக்காக, பீல் மக்கள் இரட்சிப்புக்காக ஜெபிக்கும் ஊழியர்கள், சபைகள் மற்றும் வா–பர்கள், வேலை செய்பவர்கள், உண்டியல் மூலமாக தாங்கும் சிறுவர்கள் அனைவருக்காகவும் ஜெபிக்க உள்ளார்கள். ஆகவே 03.03.2009 செவ்வாய்கிழமை ஆரம்ப உபவாச ஜெப நாளில் நடைபெறும் (24 மணி நேர உபவாச ஜெபம்) மற்றும் அதை தொடர்ந்து ஏறெடுக்கும் 40 உபவாச நாட்களை தேவன் ஆசீர்வதிக்க ஆயத்தமாகி ஜெப ஆவியினால், விண்ணப்ப ஆவியினால் நிரம்ப தடைகள் எல்லாம் நீங்கி பீல் மக்கள் இரட்சிப்பிற்காக நீங்களும் ஜெபிக்க அன்புடன் கேட்கிறோம்.




# பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதாகமத் திட்டம் (Bible Project)

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும். இந்த ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள 1000 விசுவாசிகளுக்கு 1000 குஜராத்தி வேதாகமங்களும், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலுள்ள 5000 விசுவாசிகளுக்கு 5000 ஹிந்தி வேதாகமங்களும் மொத்தம் 6000 வேதாகமங்கள் (ஹிந்தி 5000, குஜராத்தி 1000) தேவைப்படுகிறது.

அகமதாபாத், இந்திய வேதாகமச் சங்கத்தி–ருந்து நமக்கு ஒரு வேதாகமம் ரூ. 80/– என்ற விலைக்கு தர இசைந்துள்ளார்கள். ஆகவே இந்தத் திட்டத்திற்காக (6000 X ரூ. 80) **ரூ. 4,80,000/–** தேவைப்படுகிறது. இந்த நிதித் தேவை சந்திக்கப்படும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். அதற்கான தொகையை SHARING LOVE MISSION என்ற பெயரில் D.D. அல்லது Cheque மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவதிட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## எங்களுடன் தொடர்பு கொள்ள


தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

## சுவிசேஷப் பணியை விரைவுப்படுத்துவோம்...



தேவன் நமக்கு ஊழியம் செய்யும்படியாக, பீல் மக்கள் வாழும் பிராந்தியங்களைத் தந்துள்ளார். நாம் அனைவரும் அறிந்தபடி பீல் மக்கள் வாழும் கிராமங்கள் சரியான போக்குவரத்து வசதி, மின் வசதி, மருத்துவ வசதி, போன்ற அடிப்படை வசதிகள் கூட சரிவர கிடைக்கப்பெறாத பகுதிகளாகும். பல கிராமங்களில் 5 கி.மீ. முதல் 10 கீ.மீ தூரம் வரை நடந்தே வந்து எப்பொழுதாவது வரும் ஜீப் போன்ற வாகனங்களைப் பிடித்து பிரயாணம் செய்கிறார்கள். அதுபோல பீல் ஆதிவாசி மக்களுடைய வீடுகள் நமது ஊர்களில் உள்ள காலனி அமைப்பைப் போல ஒரே இடத்தில் அனைத்து வீடுகளும் இருப்பதில்லை. அவரவர் தங்கள் வயல் நிலங்களில் வீட்டைக் கட்டியிருப்பார்கள். ஆகவே ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே சற்று இடைவெளி இருக்கும். ஆகவே நம்முடைய சுதேச ஊழியர்கள் விசுவாசிகளைச் சந்திக்கவும், அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்கவும் பல கீ.மீ தூரம் நடந்தே செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. நம்முடைய சுதேச ஊழியர்களில் பலருக்கு **"சைக்கிள்"** கூட கிடையாது. குறிப்பாக கடந்த ஆண்டில் புதிதாக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து பயிற்சி பெற்றுள்ள 55 சுதேச ஊழியர்களுக்கு மிகவும் அவசரமாக, அவசியமாக **"சைக்கிள்கள்"** தேவைப்படுகிறது. இந்த புதிய ஆண்டில் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, அல்லது சபையின் சார்பிலோ ரூ. 2500/– மதிப்பில் சைக்கிள்கள் வாக்கிக் கொடுக்க முன்வரும்படி அன்புடன் உங்களை அழைக்கிறோம்.



**"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

– இயேசு கிறிஸ்து



அண்மையில் பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களுக்கு சுவிஷேசப் பணியை விரைவுப்படுத்த பங்காளர்கள் மூலம் வழங்கப்பட்ட சைக்கிள்களுடன் நமது சுதேச ஊழியர்கள்

## சுதேச ஊழியர் சாட்சி சகோ. காந்திலால் வராக்கியா



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! என்னுடைய பெயர் **காந்திலால் L. வராக்கியா.** நான் இராஜஸ்தான் மாநிலம், பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள பிலடி கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசு கிறிஸ்துவை அறிவதற்கு முன்பு, விக்கிரகங்களை வணங்கி வந்தேன். எனது அம்மா இரத்தப்போக்கு நோயினால் அநேக மாதங்களாக வேதனைப்பட்டு வந்தார். நோய் குணமாக பூஜைகள் செய்தோம், மந்திரவாதிகளிடம் சென்று மந்திர கிரியைகள் செய்தோம், இறுதியாக மருத்துவர்களிடமும் சென்று மருத்துவமும் பார்த்தோம், நோய் குணமாகவில்லை. பின்பு இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு சுகமளிக்கும் ஆராதனை நடக்கும் இடத்திற்குச் சென்று குடும்பமாக கலந்து கொண்டோம். ஊழியர் எனது அம்மாவிற்காக ஜெபித்தார்கள், உடனே எனது அம்மாவிற்கு பூரண சுகம் தேவன் கொடுத்தார். எங்கள் குடும்பத்திற்கு இயேசு வந்தபடியால் சமாதானமும், சந்தோஷமும் வந்தது. எங்களைப் பாவத்தி–ருந்தும், சாபத்தி–ருந்தும், நோய்களி–ருந்தும் விடுவித்து அவருடைய சொந்த பிள்ளைகளாக மாற்றினார். நாங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபைக்குச் செல்ல ஆரம்பித்தோம்.

பின்னர் 1999ம் ஆண்டு மற்றொரு சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது ஊழியர் எனது பெயரை இரண்டு முறை கூறி அழைத்து, இயேசு கிறிஸ்து அவருடைய ஊழியத்தை செய்யும்படியாக உன்னை அழைக்கிறார் என்று அழைப்பு விடுத்தார். உடனடியாக தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படியாக அக்கினி அபிஷேகத்தினாலும், ஆவியானவரின் வல்லமையினாலும், தரிசனத்தினாலும் நிரப்பப்பட்டேன். என்னுடைய வாழ்க்கையை தேவனுக்கென்று ஊழியம் செய்ய அர்ப்பணித்தேன். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும், தேவனுடைய சித்தம் என்னுடைய வாழ்வில் நிறைவேறவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குவோர்: **Soul Winning Church,** Chennai.

# பீல் சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனைகள்










11.01.09 அன்று பார்சா கிராமம், இராஜஸ்தானைச் சேர்ந்த சகோ. அனில் பட்டேல் அவர்கள் நாகர்கோவில் நேசமணி நகர் சீயோன் டிவி, அலுவலக வளாகத்திலும்,
26.01.09 அன்று ஜாம்லா கிராமம், குஜராத்தைச் சேர்ந்த சகோ. ரேஷ்மா ரட்டுவா,
பொட்டேல் துவா கிராமம், இராஜஸ்தானைச் சேர்ந்த சகோ. ரமேஷ் K. டாமோர் மற்றும்
சாகளி கிராமம், இராஜஸ்தானைச் சேர்ந்த சகோ. பரம்சிங் பாமோர் ஆகியோர் சீயோன் நகரில் வைத்து
**சகோ. காபிரியேல் ஜேம்ஸ்** (கடைசிகால அறுவடை ஊழியங்கள்) அவர்கள்
தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.



18.01.09 அன்று கிண்டியா கிராமம், இராஜஸ்தானைச் சேர்ந்த
சகோ. துள்ஜி காரசியா அவர்கள்
சிங்களோர் ஆன்கள் ஐக்கியத்தின் மூலமாக (குறித்துறை)
மாலை கூட்டத்தில் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டார்

சுதேச ஊழியர்களைத் தாங்குகின்ற சபைகளையும்
ஜெபக்குழுக்களையும் குடும்பங்களையும்
கர்த்தர்தாமே ஆசீர்வதிப்பாராக

**1000 கிராமங்கள் 1000 சுதேச ஊழியர்கள் எழும்பி 1000 சபைகள் உருவாக்கும் தரிசனப் பணியில் தற்போது இன்னும் 92 சுதேச ஊழியர்களை ரூ. 1500/– மாதம் கொடுத்து ஜெபித்து தாங்க குடும்பங்கள், குழுக்கள், சபைகள் தேவை. கர்த்தர் உங்கள் மனதில் ஏவினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

## B.Th., படித்து பட்டம் பெற்ற நமது ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள்



சகோ. அனில் சௌகான் B.Th.,



சகோ. விகாஸ் கராசியா B.Th.,



சகோ. பாவ்சிங் கட்டாரா B.Th.,




சகோ. ஜெய்னுசிங் B.Th.,



சகோ. மான்சிங் டாமோர் B.Th.,



சகோ. ரமேஷ் கட்டாரா B.Th.,

### தற்போது Correspondence மூலமாக B. Th.,
### படித்துக் கொண்டிருக்கும் நமது 80 ஷாலோம் சுதேச ஊழியர்கள்






## பீல் சுதேச ஊழியர்களுக்கு வேதாகம பயிற்சித் திட்டம்

தேவ கிருபையால் நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக ஒப்புக்கொடுத்த பீல் சுதேச ஊழியர்களில் 6 பேர்களை இதுவரை தெரிந்தெடுத்து B.Th படித்து முடிப்பதற்காக இராஜஸ்தானில் Philadelphia Bible College (PBC) மற்றும் Rajasthan Bible Institute (RBI) மேலும் குஜராத்தில் Methodist Bible Seminary–க்கு அனுப்பினோம். அனைவரும் சிறந்த மதிப்பெண்களுடன் Senate of Serampore மற்றும் Asian Theological Association (ATA) மூலமாக B.Th பட்டப்படிப்பினை படித்து முடித்து வந்தார்கள். இவர்கள் மூலமாக Shalom Trainning Unit அமைக்கப்பட்டு புதிய சுதேச ஊழியர்கள், மூப்பர்கள், வாலிபர்கள், சிறுவர்கள் மற்றும் அனைத்து ஊழியங்களுக்கான வேதாகம பயிற்சிகள் நடைபெற்று வருகிறது. மேலும் சிறப்பாக Alahabad Bible Seminary மூலமாக நடத்தப்படும் B.Th (ஹிந்தி மொழியில்) Course–யை Correspondence மூலமாக நம்முடைய ஷாலோம் சுதேச ஊழியர்கள் தற்போது 80 பேர் படித்து தேர்வு எழுதிக்கொண்டு வருகிறார்கள். இதுவரை 6 Semester–களை முடிக்க கர்த்தர் உதவி செய்திருக்கிறார். இவர்களுக்காக சிறப்பு பயிற்சி ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் Shalom Trainning Unit மூலமாக கொடுக்கப்படுகிறது. நம்முடைய ஷாலோம் பீல் ஊழியர்கள் வேதஅறிவு பெற்றவர்களாய் மந்தைகளுக்கு நல்ல ஆவிக்குரிய ஆகாரத்தை கொடுக்கும்படியாய் தேவன் தந்த இந்த பயிற்சிகளுக்காக குறிப்பாக Shalom Trainning Unit–க்காக தேவனைத் துதித்து ஜெபியுங்கள்.

ஒரு பீல் சுதேச ஊழியர் B.Th படிப்பை முடிப்பதற்கு **Semester Fees, Exam Fees,** புத்தகங்கள் மற்றும் பயிற்சி கொடுப்பதற்கான செலவு அனைத்தும் சேர்த்து ஒரு **Semester**-க்கு ரூ.500/– வீதம் 8 **Semester**-க்கு (4 வருடங்கள்) ரூ.4000/– தேவைப்படுகிறது. 80 சுதேச ஊழியர்களுக்காக மொத்தம் சுமார் ரூ. 3,20,000/– தேவைப்படுகிறது. இதில் உடனடியாக நாம் **Semester Fees** கட்ட அவசியமாய் இருக்கிறது. ஆகவே ரூ.4000/– கொடுத்து ஒரு சுதேச ஊழியரின் **B.Th.**, படிப்பை தாங்க முன்வரும் 80 ஆதரவாளர்கள் உடனடியாக தேவை. மாதம் ரூ.1000/– வீதம் 4 மாதங்களாக கூட கொடுக்க முன் வரலாம். தாங்க முன்வரும் ஆதரவாளர்களுக்கு சுதேச ஊழியர்களின் புகைப்படம் மற்றும் விபரம் ஜெபிப்பதற்காக அனுப்பப்படும். மேலும் பட்டமளிப்பு விழாவின் புகைப்படமும் அனுப்பிவைக்கப்படும். தேவன்தாமே இந்த தேவையை சந்திக்கவும், வேதாகம பயிற்சி சிறப்பாக நிறைவேற்றப்படவும் ஜெபியுங்கள்.

## பெண்கள் முகாம் - பவர் I.P.C. தூத்துக்குடி - 14.01.2009



செய்தி - சகோதரி ஷரிதா தேவதாஸ்



முகாமில் பங்கு பெற்ற பெண்கள்

## தூத்துக்குடி, ஷாலோம் பங்காளர் கூடுகை - 08.02.2009



சிறப்புச் செய்தி - சகோ. தேவதாஸ்



பணித்தள செய்தி - சகோதரி ஷரிதா தேவதாஸ்



பாடல் வேளை



ஷாலோம் நல்லசமய அலுவலக ஊழியர்களுக்கான ஆசீர்வாத ஜெபம்



கூட்டடன், ஷாலோம், ஜெபக்குழுவுக்காக சிறப்பு ஜெபம்
(Rev. தமிழ்ச் செல்வன், CSI தூய பேதுரு ஆலயம் தூத்துக்குடி )



கூடுகைக்கு வருகை தந்த ஷாலோம் பங்காளர்கள்

## மார்ச் 15ம் தேதி பிறந்தநாள் காணும் சகோதரி வஹிதா தேவதாஸ்



***சகோதரி வஹிதா தேவதாஸ்*** அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். இவர் ***சகோ. தேவதாஸ்*** அவர்களுக்கு தேவன் தந்த பரம தரிசனப்பணியான பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரிப் பணியிலே ஒரு அப்போஸ்தலப் பணியை நிறைவேற்றுவதிலும், ஆயிரம், ஆயிரம் பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கும், சுமார் 500 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கும் ஆவிக்குரிய தாயாக அன்பையும், அரவணைப்பையும், ஆலோசனைகளையும், தேவனுடைய வழிநடத்துதல்களையும், தேவனுடைய வல்லமையையும் அறிவித்து நடத்திச் செல்லுகிற ஒரு அன்பு சகோதரியாவார்.

தேவன் இந்நாட்களில் தம் தீர்க்கதரிசன அபிஷேகத்தை அளவில்லாமல் இவர்கள் மேல் ஊற்றியிருக்கிறார். மார்ச் 15ம் தேதி "*பிறந்த நாள்*" (15.03.1963) காணும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களை அந்நாளில் ஜெபித்து ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம். 46 வருடங்கள் கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக வாழ்ந்து வருகிறார்கள்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் தொலைபேசி எண் : 09327445469

இந்நாட்களில் அவர்களுடைய சாட்சியை அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

# அர்ப்பணித்தேன் என்னையே...

**சகோதரி. வஹிதா தேவதாஸ்**

தேவன் என்னைத் தெரிந்தெடுத்து, பயன்படுத்திவருகிறார் என்றால், உண்மையிலேயே அது அவருடைய அநாதி தீர்மானமாகும். நான் 15–3–1963 அன்று தூத்துக்குடியைச் சேர்ந்த திரு. அருள்ராஜ் – திருமதி. கிரேஸ் தம்பதியருக்கு மூத்த மகளாகப் பிறந்தேன். நாசரேத்தைச் சேர்ந்த எனது பாட்டியம்மா (அம்மாவின் அம்மா) மார்த்தாள் மோசஸ் அவர்கள் நான் பிறப்பதற்கு முன்பாக உன் பெயர் எப்சிபா (கர்த்தர் உன்மேல் பிரியமாயிருப்பார்) என்றும், இவள் ஊழியம் செய்வாள் என்றும் தேவன் வெளிப்படுத்தினதாக எனது தாயாரிடமும், என்னிடமும் கூறுவார்கள். மட்டுமல்லாமல், நான் நாசரேத் ஊருக்குச் செல்லும்பொழுதெல்லாம் மர்காஷியஸ், ராக்லெண்டு, மிஷனெரிகளின் வாழ்க்கை சரித்திரங்களைச் சொல்– மிஷனெரி தாகத்தை ஏற்படுத்தினார்கள். நான் எனது பெற்றோருக்கு மிகவும் பிரியமான மகளாகவும், அதே நேரத்தில் கிறிஸ்தவ பக்தி, ஒழுங்குகளில் சரியாக வழி நடத்தப்பட்டும வளர்க்கப்பட்டேன். இளம் பருவத்தி–ருந்தே நான்

இயேசு கிறிஸ்துவை அதிகமாய் நேசிக்கின்ற இருதயத்தை கிருபையாய் பெற்றிருந்தேன். மட்டுமல்லாமல் பாடல்களின் மூலம் தேவனைத் துதிப்பதில் அதிக மகிழ்ச்சியடைவதுண்டு.

1976–ம் ஆண்டு நாகர்கோவி–ல் கொட்டாரம் என்ற இடத்தில் நடைபெற்ற வா–பப் பெண்கள் முகாமில் பங்கெடுத்தபோது, சந்தியா வேளையில் இயேசு கிறிஸ்துவின் முகத்தை தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். என்னையும் அறியாமல் தேம்பி தேம்பி அழுது இரட்சிப்பைப் பெற்றேன். **"கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?** சங்கீதம் 27:1 இந்த வசனத்தின் மூலம் தேவன் என்னோடு பேசி என்னை பெலப்படுத்தினார். அந்த நேரமே என்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தேன்.

அந்த வருடத்தில் ஆறுமுகநேரி C.S.I. திருச்சபையின் மூலம் V.B.S. Directors Training க்கு அனுப்பப்பட்டேன். பயிற்சியி–ருந்து வந்த பின்பு எனது பொறுப்பில் கொடுக்கப்பட்ட 300 சிறு பிள்ளைகளைப் பார்த்த பொழுது என் உள்ளம் ஆத்தும பாரத்தினால் நிறைந்தது. 10 நாட்களுக்குள் பிள்ளைகள் அனைவரையும் இரட்சிப்புக்குள் வழிநடத்த வேண்டும் என்ற வாஞ்சையுடனும், ஜெபத்துடனும் செயல்பட ஆரம்பித்தேன். தேவன் என் வாஞ்சையையும் ஜெபத்தையும் கேட்டருளினார். பின்பு நான் அதிகமாய் ஆத்தும பாரத்தினால் நிரப்பப்பட்டேன்.

உடனே ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையிருந்த பொழுதிலும் பெற்றோரின் விருப்பப்படியே கல்லூரி படிப்பிற்குச் சென்றேன். ஆனாலும் விடுமுறை நாட்களில் YFC (Youth for Christ) – ல் Youth Camp – களில் Volunteer ஆகச் சென்று உதவி ஊழியம் செய்வேன். ஆனாலும் எனது சரீரத்தில் அடிக்கடி இழுப்பு வியாதியினால் அதிகம் கஷ்டப்படுவேன். திடீரென்று ஒரு நாள் வியாதி அதிகரிக்கவே, மிகவும் பெலவீனப்பட்டு தினமும் இரண்டு ஊசிகள் போடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த நாட்களில் எனது தாயாரும் எனக்கு வியாதியி–ருந்து விடுதலை கிடைத்தால் ஊழியத்திற்கு அனுப்புவேன் என்று பொருத்தனையோடு ஜெபித்தார்கள். இரண்டு நாட்கள் மருத்துவமனைக்குச் சென்றேன். ஆனால் அன்று இரவு காயல்பட்டிணத்தில் சகோ. மோகன். சி. லாசரஸ் அவர்கள் கூட்டம் நடைபெற்றது. மிகவும் வேதனையோடு பங்குபெற்றேன். அன்று சகோதரர் ஜெபிக்கும் போது தேவன் எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். அன்றோடு என்னுடைய சரீர வியாதியி–ருந்து விடுதலை பெற்றேன். எனக்கு ஜீவன், சுகம், பெலன் தந்த தேவனுக்காக வாழ என்னை அர்ப்பணம் செய்தேன்.

திடீரென்று எனது தகப்பனார் வியாதிப் படுக்கையில் விழுந்தபடியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக, நான் வேலைபார்த்தால்தான் குடும்பத்தை நடத்த முடியும் என்ற சூழ்நிலை நேரிட்டது. நான் Telephone, Wireless Operator Course முடித்திருந்தபடியால்

அந்த வேலை கிடைக்கும்படியாய் எனது தாயார் அதிக முயற்சி எடுத்தார்கள். இதற்கிடையில் மிஷனெரியாக ஒரிஸா செல்லும்படியாக ஆலோசனை, சபை போதகரான Rev. காந்தி செல்வின் அவர்கள் மூலம் கிடைத்தது. உடனே ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்தேன். எனது பெற்றோரும் கண்ணீரோடு என்னை அர்ப்பணித்தார்கள். நான் இந்திய மிஷனெரி சங்கத்தில் (IMS) சேர்ந்து பயிற்சிக்குச் சென்ற மூன்றாவது நாளில் எனக்கு Telephone Operater வேலைக்கான Order கிடைத்தது. ஒரு பக்கம் ஊழியம், மறு பக்கம் உலக வேலை, எதைத் தெரிந்தெடுப்பது? உலகத்திலேயே மிகவும் உன்னதமான பணியாகிய ஊழியத்தையே செய்வதாக முடிவெடுத்து, உலக வேலைக்கான Order–ஐ அந்த இடத்திலேயே கிழித்தெறிந்துவிட்டு என்னை ஊழியத்திற்கென்று முழுமையாக அர்ப்பணித்தேன்.

1983–ல் IMS –மூலம் ஒரிஸா மாநிலத்தில் மல்க்கன்கிரி என்ற பணித்தளத்தில் மிஷனெரியாக சென்று 2 ஆண்டுகள் பணிபுரிந்தேன். கோயா மற்றும் சந்தா– இனமக்கள் மத்தியில் கிராம ஊழியத்திற்கு வாரந்தோறும் சைக்கிளில் சென்று ஊழியம் செய்ய கிருபை செய்தார். மட்டுமல்லாமல் மல்க்கன்கிரி பணித்தளத்தில் உள்ள ஆதிவாசி சிறுவர்களுக்கு இயேசுவைப் பற்றி போதிக்கும் கிருபையை பெற்றிருந்தேன். மட்டுமல்லாமல் பணித்தளத்தில் தலைமை போதகராக இருந்த Rev. பால் ஜெயராஜ் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து மற்றும் அங்குள்ள ஒழுங்கு முறைகள், கட்டுபாடுகள் எல்லாவற்றையும் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு உற்சாகமாய் ஊழியம் செய்தேன். நான் எதிர்காலத்திலும் தேவனுக்காக ஊழியம் செய்து கர்த்தருக்கு மகிமையாய் வாழவேண்டும் என்று பாரத்துடன் ஜெபித்து வந்தேன். என் ஜெபத்தையும் கர்த்தர் கேட்டார்.

1985–ம் ஆண்டு ஜுலை 8–ம் தேதி FMPB –ல் பீஹாரில் மிஷனெரியாக பணியாற்றிக் கொண்டிருந்த **சகோ. தேவதாஸ்** அவர்களோடு திருமணம் நடந்தது. திருமணமான முதல் வாரத்தில் **"ஒரு ஜாதி மக்களைத் தருவேன்"** என்று வாக்குத்தத்தம் செய்த கர்த்தரிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, கைகளில் வில், அம்பு ஏந்திக் கொண்டிருக்கும் பீல் ஆதிவாசிமக்களை தேவன் தரிசனமாகக் காட்டினார். அதன்படி IMS ஸ்தாபனத்தின் மூலமாக பீல் மக்கள் மத்தியில் குஜராத், துதியா பணித்தளத்தில் முதன்மை மிஷனெரிகளாக பணியாற்றி வந்தோம். அதன்பின்பு 1991ம் ஆண்டு கர்த்தர் ஷாலோம் மிஷனெரி ஊழியத்தை ஆரம்பிக்க உதவி செய்தார். ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணித்திருந்த எங்கள் இருவரையும் தேவன் இணைத்தது நிச்சயமாகவே தேவனுடைய அநாதி திட்டமாகும். அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார் என்ற வாக்கின்படியே எங்களை அழைத்தவர் கடந்த 18 வருடங்கள் எங்கள் வாழ்க்கையிலும், பீல் மக்கள் ஊழியப்பாதையிலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். தேவன் எங்களுக்கு டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா ஆக மூன்று பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

மார்த்தாண்டத்தில்

# ஷாலோம் மிஷனெரி தரிசன கூடுகை

நாள்
**மார்ச் 22 - 2009**
**ஞாயிற்றுக்கிழமை**

நேரம்
**மாலை 5.00 மணி**

இடம்
**ஸ்டண்டர்ட் ஆடிட்டோரியம்,**
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

**Bro. Selvam,** Cell : 93447-24395
**Bro. George,** Cell : 94439-93423
**Bro. Kingbert,** Cell : 94439-93423

தேவ செய்தி :

## சகோ. வே. தேவதாஸ்

பணித்தள செய்தி :

## சகோதரி வஹிதா தேவதாஸ்

சென்னையில்

# ஷாலோம் பங்காளர் கூடுகை

நாள்
**மார்ச் 29 - 2009**
**ஞாயிற்றுக்கிழமை**

நேரம்
**மாலை 6.00 மணி**

இடம்
**Annai Anjugam திருமண மண்டபம்,**
Dr. அம்பேத்கார் ரோடு, கோடம்பாக்கம்,
(Near Power House Bus Stop) சென்னை **–24**

தொடர்புக்கு : **Bro. Ebanezer,** Cell : 93444-75468

# ஸ்டான்– ஜோன்ஸ்

மிஷனெரி முன்னோடிகள்



ஸ்டான்– ஜோன்ஸ் இங்கிலாந்தில் மேரிலேண்டு என்ற இடத்தில் 1884ஆம் ஆண்டு பிறந்தார். கல்லூரி நாட்களில் தன்னார்வ மாணவர்கள் என்ற இயக்கத்தில் இணைந்தார். ஒரு முறை ஆப்பிரிக்க மிஷனெரியான டேவிட் –விங்ஸ்டனின் சந்திப்பினால் தொடப்பட்டு ஆப்பிரிக்காவிற்கு மிஷனெரியாகச் செல்ல தீர்மானித்தார். ஆனால் அவர் சார்ந்திருந்த சங்கமோ அவரை இந்தியாவிற்கு அனுப்ப முடிவு செய்தது. அவர் மிஷனெரியாக வருவதற்குமுன் ஒரு இடத்தில் முதல் முறையாக பிரசங்கிக்கச் சென்றார். பிரசங்கம் மறந்து போகவே உட்கார்ந்து விட்டார். உடனே ஆவியானவர் “உன்னால் பிரசங்கிக்க முடியாவிட்டாலும், உன் வாழ்க்கையில் நான் செய்ததை சொல்லலாமே” என்று கூறவே உடனே எழுந்து, தனது மிஷனெரி அழைப்பைப் பற்றி பகிர்ந்து கொண்டார். அதைக்கேட்ட ஒரு வா–பன் மறுவாழ்வு பெற்று, தான் ஒரு போதகராக மாறியதோடு, தனது மகளை ஆப்பிரிக்க தேசத்திற்கு மிஷனெரியாகவும் அனுப்பி வைத்தார். அன்று முதல் பிரசங்கிக்க முடியாவிட்டாலும் ஆண்டவருக்கு சாட்சியாக வாழுவேன் என்று தீர்மானித்தார்.

இந்தியா வந்தடைந்த ஜோன்ஸ், லக்னோவில் ஆங்கில திருச்சபையில் மெதடிஸ்ட் போதகராக 1970ல் நியமிக்கப்பட்டார். ஹிந்தி மொழியை கற்றுக்கொண்டு 3 ஆண்டுகளுக்குப் பிறகு சீதாபூர் என்ற இடத்தில் ஏழை எளிய ஒதுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தங்கி ஊழியம் செய்தார். ஆனால் இவரோ உயர்குடி மக்களுக்கு இயேசுவை அறிவிக்க வாஞ்சை கொண்டார். அது அவருக்கு ஒரு சவாலாக இருந்தது.

ஒன்பது ஆண்டு மிஷனெரிப் பணியில் சில படித்த உயர்வகுப்பினரின் தொடர்பு கிடைத்தது. அவர்கள் மத்தியில் சுவிசேஷப்பணி செய்வதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொண்டார். மேற்கத்திய கலாச்சாரத்தை ஒதுக்கிவிட்டு, இந்திய கலாச்சார முறைகளை பின்பற்றி இந்திய சமுதாயத்தினருக்கு கிறிஸ்துவை உலக இரட்சகராக வெளிப்படுத்தினார். உதாரணமாக வட்டமாக தரையில் உட்கார்ந்து மற்ற மத

நண்பர்களுடன் உரையாடுதல், ஆசிரமமம் அமைத்து மாணவர்களுக்குப் போதித்தல் போன்றவை குறிப்பிடத்தக்கவை. ஒரு முறை விடுமுறைக்காக தனது தேசத்திற்குச் சென்று திரும்பியபின் மனநோயால் பாதிக்கப்பட்டார். பின்பு தேவகிருபையால் சுகம்பெற்று சமாதானத்தினால் நிரப்பப்பட்டார். இதை இருண்டநாட்கள் என்று கூறுகிறார். ஆசிரம முறையில், மேற்கத்திய எல்லா பழக்க வழக்கங்களையும் ஒழித்து விட்டு, முழுமையாக இந்திய சமூக வாழ்க்கையை பின்பற்றினார். ஆசிரம வாழ்வில் காலை 5.30க்கு அனைவரும் துயில் எழுந்து தியானவேளை, ஜெபநேரம், கலந்துரையாடல், பொதுவான வேலைகள் மற்றும் வாரத்தில் ஒரு முறை அமைதி நேரம் என அனுசரிக்கப்ட்டது. 1940ஆம் ஆண்டு 24 கிறிஸ்தவ ஆசிரமங்களை இந்தியா முழுவதும் நிறுவினார். வித்தியாசமான அணுகுமுறை கொண்ட சுவிசேஷகனாக பணியாற்றியதால் நேரு, மகாத்மா காந்தி ஆகியோரின் நண்பனாக இருந்தார். இந்தியாவிலும் உலகெங்கிலும் வித்தியாசமான ஒரு தனிமனிதனாக போற்றப்பட்டார்.

ஜோன்ஸ் பிரசங்கித்த சுவிசேஷம் கிறிஸ்தவம் பற்றியதல்ல, கிறிஸ்துவைப் பற்றியது. கிறிஸ்துவை மட்டுமே அவர் போதித்தார். கிறிஸ்தவம் மேற்கத்திய மதம் என்று வெறுத்து ஒதுக்கிய மேல்குடி மக்களுக்கு மேற்கத்திய கலராச்சாரம் முழுவதையும் களைந்துவிட்டு, கிறிஸ்து உலகமக்களுக்கு இரட்சகர் என்பதை வெளிப்படுத்தி, இந்திய கலாச்சாரத்திலேயே கிறிஸ்துவை கொடுக்க அரும்பாடுபட்டார்.

ஒரு முறை ஜப்பானில் கூட்டங்கள் நடத்தியதில் சுமார் 10 ஆயிரம் பேர் கிறிஸ்துவுக்காக வாழ ஒப்புக் கொடுத்தனர். 1983ல் சென்னையில் நடந்த உலக திருச்சபை மாநாட்டிலும் முக்கிய பங்கு வகித்தார். மெதடிஸ்ட் சபையின் போதகராக இருக்க கேட்டுக் கொண்டபோது, நான் ஒரு சுவிசேஷகன், பிஷப் அல்ல என்று கூறிவிட்டார். கிறிஸ்துவின் பூரண தன்மையையும் சுவிசேஷத்தின் சிறப்பையும் எடுத்துக் கூறி, தாங்களாகவே வேத வசனத்தின் மூலம் இயேசுவை ஏற்றுக்கொள்ள வழிவகுத்தார். இவர் எழுதிய “இந்திய பாதையில் கிறிஸ்து” என்ற புத்தகம் எல்லாராலும் போற்றி வாசிக்கப்பட்டது. 40 ஆண்டுகள் மிஷனெரியாக பணிபுரிந்தார்.

1973ல் அவர் மரணமடைந்தார். அவர் மரணம்வரை உத்தம கிறிஸ்தவ ஊழியனாக வாழ்ந்து, பணிசெய்து பல இந்திய மிஷனெரி ஸ்தாபனங்களுக்கு முன் மாதிரியை காண்பித்துச் சென்றார்.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **முகேஷ் பர்மார்** |
| தகப்பனார் பெயர் | : | கேசவ் பர்மார் |
| தாயார் பெயர் | : | ரமிலாபேன் பர்மார் |
| பிறந்த நாள் | : | 10.06.1996 |
| படிக்கும் வகுப்பு | : | VIII |
| சொந்த ஊரின் பெயர் | : | நெல்சூர் |
| தாலூகா | : | கர்பாடா |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |
| படிக்கும் பள்ளி | : | Shalom School |
| தங்கி படிக்கும் விடுதி | : | Jesawada - Gujarat |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:—**

முகேஷ்பர்மாரின் தந்தை கேசவ் பர்மார் மிகவும் பின்தங்கிய பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். சாராயத்தைக் குடித்து அனைத்து விதமான பாவ பழக்கவழக்கங்களிலும் ஈடுபட்டு அசுத்த ஆவிகளை வணங்கி வாழ்ந்து வந்தவர் இவர். இதனால் குடும்பத்தில் சிறிதும் நிம்மதி இல்லாமல் காணப்பட்டார். ஒரு நாள் முகேஷ்பார்மாரின் தலை ஒரு குழாயில் மாட்டிக் கொண்டது. எவ்வளவோ பிரயாசப்பட்டும் வெளியே வரவில்லை. இந்நிலையில் சகோ. கேசவ் பர்மார் தான் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த இயேசுவை விசுவாசித்து ஜெபித்தார். உடனடியாக தலை தானகவே குழாயி—ருந்து வெளியே வந்தது. இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை விசுவாசித்து பாவங்களை அறிக்கையிட்டு முழு குடும்பமாக ஆண்டவரை ஏற்றுக் கொண்டார். முகேஷ்பர்மாருக்கு விடுதலை கொடுத்த ஆண்டவருக்கு ஊழியம் செய்ய தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து தன்னுடைய சொந்த கிராமமான நெல்சூரில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

முகேஷ்பர்மார் படிப்பத்தில் மிகவும் உற்சாகமான மாணவன். மிகவும் நன்றாக விளையாடுவான். படித்து முடித்தபின் ஊழியக்காரனாக ஆசைப்படுகிறான்.

**ஜெபியுங்கள்:-**

நல்ல ஞானத்தை தேவன் கொடுக்கவும், இவனுடைய எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Mrs. Jeyarani Devaraj,** Coimbatore.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 270 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ அத்துடன் மறவாமல் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## துதியுங்கள்

- 2009–ம் வருடம் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் கர்த்தர் எங்களோடு கூட இருந்து அதிக எதிர்ப்புகள், பிரச்சனைகள் மத்தியிலும் கூட பணித்ததளத்தில் எல்லா கூட்டங்களையும் நடத்த கிருபை செய்தார்.

- குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் தனித் தனியே ஊழியர்கள் குடும்பமாக இணைந்து மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டது. புதுவருட வாக்குத்தத்த செய்திகளோடு புதிய தரிசனங்களையும், புதிய தீர்மானங்களையும் எடுத்து 2009 ஊழியத்திற்கு தங்களை ஜெபத்துடன் ஆயத்தப்படுத்தினார்கள்.

- இராஜஸ்தானில் டெப்ரி, ஹரேந்திரகட், ஜும்க்கி ஆகிய மூன்று இடங்களில் ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூட்டங்களை சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தினார்கள். ஊழியக்காரிகள் ஆவியில் நிறைந்து, புதிய தரிசனங்களை பெற்று, அதிக உற்சாகமடைந்தார்கள். அபிஷேகம் பெறாமல் இருந்த புதிய Volunters மனைவிமார்கள் அனைவரும் அபிஷேகத்தைப் பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

- மூன்று மாநிலங்களில் உள்ள முக்கியமான தலைமை மூத்த ஊழியர்களில் 100 பேருக்கு மெகமதாபாத் என்ற இடத்தில் வைத்து மூன்று நாட்கள் விசேஷித்த தலைத்துவ பயிற்சி நடத்தப்பட்டது. அதில் விசேஷமாய் மூப்பர்களை உருவாக்கும்படியான பயிற்சி கொடுக்கப்பட்டது.

- பெப்ரவரி மாதத்தில் B.Th எழுதுகிற ஊழியர்களுக்கு 6–வது Semester Exam சிறப்பாக நடைபெற்றது. புதிதாக இணைந்தவர்களையும் சேர்த்து 80 பேர் எழுதினார்கள்.

- பெப்பரவரி மாத ஊழியர்கள் கூடுகை 6 பிரிவாக பிரிந்து மூன்று மாநிலங்களிலும் நடைபெற்றது. ஹரேந்திரகட் (இராஜஸ்தான்) ஜும்க்கி (இராஜஸ்தான்) ரூன்கேடா (மத்தியபிரதேசம்) சஜே– (மத்தியபிரதேசம்) ஜோபட் (மத்தியபிரதேசம்) தாகோத் (குஜராத்) அந்தந்த பகுதியில் நடத்த தேவன் கிருபை செய்தார்.

- பெப்ரவரி மாதத்தில் மத்தியபிரதேசத்தில் உள்ள ஊழியக்காரர் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூட்டங்கள் ரூன்கேடா, சஜே– என்ற இரண்டு இடத்திலும் குஜராத்திலும் சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தினார்கள்.

- கடந்த மாதம் விசேஷமாய் மூன்றுமணி நேர அந்நியபாஷை ஜெபமும், முழுஇரவு ஜெபமும் பெண்கள் கூடி நடத்தினார்கள். இந்த ஜெபங்களில் அநேகர் தரிசனங்களையும், புதிய கிருபைகளையும் பெற்றார்கள்.

- கடந்த மாதம் ஊழியக்கார மனைவிமார்களுக்கு வேதாகம பரீட்சை நடத்தப்பட்டது. இயேசு சொன்ன அனைத்து உவமைகளையும் மனப்பாடமாக படித்துக் கூறினார்கள். இந்த பரீட்சை மூன்று மாநிலங்களிலும் சேர்த்து 16 இடங்களில் நடைப்பெற்றது. இதைத் தலைமை ஊழியக்காரிகள் பொறுப்பேற்று நடத்தினார்கள்.

- பெப்ரவரி மாதம் 8–ம் தேதி தூத்துக்குடியில் நடைபெற்ற ஷாலோம் பங்காளர் கூடுகை மற்றும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 6 இடங்களில் நடைபெற்ற மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகளுக்காக தேவனைத் துதியுங்கள்.

## ஜெபியுங்கள்

- நம் பாரத தேசத்தில் உள்ள முழு பீல் மக்கள் இரட்சிக்கப்பட...
- 2010–க்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள், 1000 சபைகள் எழும்பப்பட...
- ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களின் பரிசுத்தமான வாழ்க்கைக்காக அபிஷேக நிறைவுடன் ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாக விளங்க, அவர்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட...
- கிராமங்களில் தற்போது கட்டப்படும் கிராம ஆலயப் பணிகள் தடையின்றி நடைபெற
- மார்ச் 1–ம் தேதி பீல் ஆதிவாசி மாணவர்களின் தேர்வுக்கான ஜெபத்தில் அநேக மாணவர்கள் பங்கெடுத்து தேவ ஆசீர்வாதம் பெற...
- மார்ச் மாதத்தில் நடைபெற உள்ள சுதேச ஊழியர் கூடுகை மூன்று மாநிலங்களில் அபிஷேக வல்லமையுடன் நடைபெற...
- குஜராத்தில் ஜெசவாடா Shalom Hostel, IP Mission Hostel மற்றும் இராஜஸ்தானில் பிஜல்பூர் Shalom Hostel, பள்ளி, கோய்க்கா ஷாலோம் விடுதி, மத்தியபிரதேசத்தில் உள்ள அந்தர்வே–யா விடுதி மற்றும் பல இடங்களில் பயிலும் நம் ஆதிவாசி பிள்ளைகள் படிப்பிற்காக, சுகத்திற்காக, பாதுகாவலுக்காக ...
- மார்ச் 3 முதல் ஏப்ரல் 1 வரை நடைபெற உள்ள **40 நாட்கள் ஷாலோம் உபவாச ஜெபத்தை** தேவன் ஆசீர்வதிக்கவும், மார்ச் 3–ம் தேதி நடைபெற உள்ள **24 மணி நேர ஷாலோம் உபவாச ஜெபத்தை** தேவன் ஆசீர்வதித்து ஜெப ஆவியினாலும், விண்ணப்பத்தின் ஆவியினாலும் நிரப்ப...
- புதிதாக தெரிந்தெடுக்கப்படவுள்ள 40 சுதேச ஊழியர்களுக்காக 3 நாள் சிறப்பு பயிற்சி மற்றும் விடுதலை ஆசீர்வாத முகாமிற்காக ...
- குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தானில் Shalom Church Network விரைவில் செயல்படுத்தப்பட சபைகளில் எழுப்புதலுடன் நியமங்கள் பராமரிக்க ...
- தூத்துக்குடி தலைமை அலுவலகம், தாகோத் பணித்தள அலுவலகம் மற்றும் முன்னேற்றப்பணி, பணித்தளத்தில் Trainning Unit–ல் பணிபுரியும் தேவ பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட...
- பணித்தளத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட குறிப்பாக ஜெபித்து, மாதம் ரூ. 500 கொடுத்து தாங்கும் **500 ஷாலோம் கிராம ஊழிய ஆதரவாளர்கள்** எழும்ப ...
- ஷாலோம் ஊழியத்தை தாங்குவோர், சபைகள், ஊழியங்கள், வேலை செய்பவர்கள், வியாபாரிகள் ஆசீர்வதிக்கப்பட ...
- மார்ச் 21, 22 மார்த்தாண்டம் பகுதியிலும், மார்ச் 29–ம் தேதி சென்னைப் பகுதியிலும் நடைபெற உள்ள ஷாலோம் பங்காளர் கூடுகைக்காக ...
- மே மாதம் நடைபெறவுள்ள V.B.S-க்காக பயிற்சிகள் கொடுக்கப்பட 20,000 புத்தகங்கள் Print பண்ண தேவைகள் நிதி ரூ.1.5 இலட்சங்கள் கிடைக்கப்பட ...
- பணித்தளத்தில் ஒவ்வொரு நாளும் தேவனுடைய பாதுகாவலுக்காக, அனைத்து பிரயாணங்களில் தேவ கிருபை தங்க, குறிப்பாக ஊழியங்களை நடத்துவதற்கு தேவ ஞானம் கிடைக்கப்பெற...
- சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் ஆகியோருக்காகவும் மற்றும் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா அகியோரின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

## பணித்தளத்திற்கு இசைக்கருவி தேவை!

***வளர்ந்து வரும் நம் ஷாலோம் ஊழியங்களில் பாடல்களின் மூலம் தேவனை மகிமைப்படுத்துவதற்காக...***




- ஊழியர் கூடுகை,
- மூப்பர்கள் கூடுகை,
- பெண்கள் முகாம்,
- வா–பர் முகாம்,
- நற்செய்திக் கூட்டங்கள்,
- ஞாயிறு ஆராதனைகள்,
- சிறுவர் முகாம்,
- உபவாச ஜெபம்,
- முழு இரவு ஜெபம்

மற்றும் பல ஊழியங்களில் பயன்படுத்தவும், மேலும் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலுக்காக ஹிந்தி, பீ–, பிலோடி மற்றும் பாகுடி மொழிகளில் பாடல்கள் பாடி பதிவு செய்து ஆடியோ கேசட்கள், C.D.-க்கள், மற்றும் V.C.D.-க்கள் வெளியிடவும், KORG கம்பெனி KEY BOARD பணித்தளத்திற்குத் தேவைப்படுகிறது. தயவு செய்து இந்த தேவை ஏரத்தாள ரூ. 35,000/– கிடைக்கப்பெற ஜெபியுங்கள். ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் உதவ முன் வாருங்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

***எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். சங்கீதம் 150:3***

## நாட்டு நடப்புச் செய்திகள்....

அண்டார்டிகாவில் இந்திய அரசு கங்கோத்ரி என்ற பெயரில் ஆராய்ச்சி ஒன்றை தொடங்கியது. ஆனால் அங்குள்ள ஐஸ் கட்டிகள் உருகி வருவதால் ஆராய்ச்சியை தொடரமுடியாத நிலை, ஆகவே மைத்திரி என்ற ஆராய்ச்சி தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ரூ. 140 கோடி செலவில் ஆண்டார்டிகாவில் பாரதி என்ற ஆராய்ச்சியை தொடங்குவதற்கான பணிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. நுண்ணுயிரிகளி–ருந்து மருந்துகள் தயாரிப்பதே ஆராய்ச்சியின் முக்கிய நோக்கமாகும் என்று கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்திய அரசின் புவி அறிவியல் துறை செயலாளர் சைலேஷ்நாயக் கூறியுள்ளார்.

கொரிய நாட்டின் சரக்குக் கப்பல் குஜராத்தி–ருந்து கொரியாவிற்குச் சென்று கொண்டிருந்தபோது கப்ப–லுள்ளவர்கள் மாடு மற்றும் கோழி இறைச்சி சாப்பிட்டனர். இதைச் சாப்பிட்டதால் 4 பேர் உயிரிழந்தனர் 16 பேர் உடல்நிலை பாதிக்கப்பட்டனர். இதையடுத்து, கப்பல் கன்னியாகுமரி கட–ல் கடந்த 11ம் தேதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது. டெல்–யில் இருந்து மொர்க்கன்டைல் மரைன் டிபார்ட்மென்ட் அதிகாரிகள் கன்னியாகுமரி வந்து கப்பலை ஆய்வு செய்து சான்று அளித்த பின்பே கப்பல் புறப்படும்.

இலங்கையில் பொதுமக்கள் வாழும் பகுதியில் தாக்குதல் நடத்துவதை உடனே நிறுத்த வேண்டும் என்று இலங்கை ராணுவத்திற்கும், பு–களுக்கும் ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. வடக்கு வன்னிப் பகுதியில் பாதுகாப்பு மண்டலங்கள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் பொதுமக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். இதுபோன்ற இடங்களில் தாக்குதல் நடத்தக்கூடாது என்பது மரபு, ஆனால் கடந்த வாரம் வன்னிப் பகுதியில் பாதுகாப்பு மண்டலங்களில் நடந்த சண்டையில் பொதுமக்களில் பலர் உயிர் இழந்தனர்.

சென்னை வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்படாமல் இருக்க மத்திய அரசு ரூ. 1,448 கோடி செலவில் புதிய திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது என்று பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள கோத்தயம் கிராமத்தில் சுமார் ரூ. 7 கோடி மதிப்பில் நல்தங்காள் ஓடைக்குக் குறுக்கே அணை அமைக்கப்படும். இந்தப்பணி வரும் நிதி ஆண்டில் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

– நன்றி தினகரன்

# ஜாம்புகேடா (மத்தியப்பிரதேசம்) கிராம ஆலயம்



ஜம்புகேடா கிராமம் நகரத்திருந்து மிகவும் உள்ளடங்கிய மலைப்பாங்கான, வாகன வசதிகள் இல்லாத கிராமம். இங்கு வாழும் மக்கள் குடிப்பதையும், திருடுவதையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். மற்றும் இறந்த ஆவிகளை வணங்குதலையும், வியாதிப்பட்டால் பூஜை மற்றும் மந்திரவாதிகளிடம் சென்று மந்திரம் செய்வதையும் பழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்களில் ஒருவர்தான் சகோ. திப்சிங் வாகனியா.

இவருடைய மனைவி, பிள்ளைகள் அனைவரும் பிசாசின் பிடியில் அகப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். அதிக பணம் செலவு செய்து மந்திரகிரியைகள் மற்றும் மருத்துவம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இந்த நிலைமையில் தாமனி என்றகிராமத்தில் நடைபெற்றஷாலோம் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். அப்பொழுது சுதேச ஊழியர் ஜெப எண்ணெயை பூசி ஜெபித்த நேரத்தில் பிசாசின் பிடியிருந்து முழு குடும்பத்துக்கும் தேவன் விடுதலையை கொடுத்தார். பின்பு இரண்டு ஆண்டுகள் விசுவாசியாக இருந்தார். பின்பு தனக்கு சுகம் மற்றும் விடுதலை கொடுத்த இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து 2001–ல் தனது வீட்டில் ஆராதனை கூட்டத்தை ஆரம்பித்தார். அநேக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டார்கள். தேவனுடைய கிருபையால் தற்போது 68 குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவனை ஆராதிக்கின்றனர். ஆலயம் கட்டுவதற்கு தனது சொந்த இடத்தை காணிக்கையாக கொடுத்தார். தூத்துக்குடியைச் சார்ந்த சகோ. செல்வின் சகாயராஜ் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுத்த ரூ. 50,000/– மற்றும் மல்லாங்கிணறைச் சார்ந்த சகோதரி சந்திரா லீலா அவர்கள் குடும்பம் சார்பில் கொடுத்த ரூ. 50,000/– நிதி உதவிகளினால் இந்த கிராமத்தில் ஒரு நல்ல பெரிய அழகான ஆலயம் தேவ நாமம் மகிமைக்காக கட்டப்பட்டது.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

**தூத்துக்குடியில் நடைபெற்ற இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாவிற்காக தூத்துக்குடி வந்திருந்த Dr. பால் தினகரன் அவர்கள் சகோ. தேவதாஸ் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்து ஜெபித்தார்கள்.**






தூத்துக்குடியில் ஜனவரி 15 முதல் 18 வரை நடைபெற்றஇயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாவிற்காக தூத்துக்குடி வந்திருந்த Dr. பால் தினகரன் அவர்கள் தூத்துக்குடியில் உள்ள எங்களது இல்லத்திற்கு வருகை தந்து எங்களுக்காகவும், விசேஷமாக எங்களது பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவுக்காகவும், ஷாலோம் ஊழியங்களுக்காகவும் சிறப்பு ஜெபங்களை ஏறெடுத்து ஆசீர்வதித்தார்கள். அவர்களுடைய வருகை எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் தந்தது. மேலும் தேவன் அவர்கள் மூலமாய் தந்த வாக்குத்தத்தங்கள் மற்றும் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்காக தேவனைத் துதிக்கிறோம். கர்த்தர் எங்களுக்கு தந்த இந்த இல்லத்தை கட்டுவதற்கு மிகுந்த பணஉதவியை சொந்த மகனுக்கு கொடுத்ததைப்போல் அன்பு தகப்பன் Dr.D.G.S. தினகரன் ஐயா மூலமாக தேவன் தந்தருளினார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் Dr. பால் தினகரன் அவர்கள் வந்து வீட்டை ஜெபித்து, ஆசீர்வதித்து எங்கள் மீது வைத்த அன்புக்காக தேவனைத் துதித்து Dr. பால் தினகரன் அவர்கள் குடும்பத்தாருக்கு மிகுந்த நன்றி கூறுகிறோம்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss